தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 24, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, நவம்பர் 10, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

ஒருவன் தன் குடிமக்களை உயர்த்தும் பொருட்டு தான் மேற்கொண்டுள்ள கடமையைச் செய்து முடிக்காமல் பின் வாங்கமாட்டேன் என்னும் மன உறுதி போன்ற சிறப்பு வேறு எதுவுமில்லை.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள்.

வினா எண் 81, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு நிதியமைச்சர்.

81—

வரி வருவாயில் மாநில அரசுக்கு ஒதுக்கீடு

64929*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 நவம்பர் 10

(அ) வருமான வரி, கலால் வரி, சுங்க வரி போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மாநில அரசுகளுக்குத் தரவேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

வருமானவரி:

வருமான வரியில் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பு முதலாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி 55 சதவீதமாக இருந்தது. அது, ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி 85 சதவீதமாக உயர்ந்துள்ளது. அப்போது முதல் அதே நிலையில் இருந்து வருகிறது.

பத்தாண்டுகளுக்கு மேலாக மொத்தத் தொகுப்பு 85 சதவீதமாக இருந்துள்ளபோதிலும், அதற்கு மேலும் அதை உயர்த்துவதற்கு இயலாது என்பதால் அதனை 85 சதவீதமாக நிறுத்திவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்பாராத சூழ்நிலைகளுக்காக கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வருமான வரியின் மீது மேல் வரி விதிக்கப்படுகிறது. எனவே, அது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டும் விதிக்கப்படவேண்டும். தேவைப்படும்போது மட்டுமே மேல் வரி விதிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசியலமைப்பின் நிதி விதித்துறைகள் குறித்த நிபுணர் குழு (1947) எச்சரித்துள்ளது. அத்தகைய சூழ்நிலைகளில் விதிக்கப்படும் வரி எப்போதாவது விதிக்கப்பட வேண்டும். நீண்ட கால அளவிற்கு விதிக்கப்படக்கூடாது. எனினும், நடைமுறையில் 1951-52 முதல், இந்நாள்வரை, குறைந்த கால இடைவெளிவிட்டு மேல்வரி தொடர்ச்சியாக விதிக்கப்பட்டு வருகிறது. எனவே, வருமான வரியின் மீதான மேல்வரி, வருமான வரி பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் கொண்டுவரப்பட வேண்டும்.

1995 நவம்பர் 10]

பெருநகரப் பகுதியில் சொத்துக்களை உடனடியாக விற்பனை விலை கொடுத்து வாங்குதல் மூலம் கிடைக்கும் வரவினங்கள், அபராதங்கள், வட்டி வசூல் ஆகியவற்றைச் சேர்ப்பதன் மூலம் (இவை தற்போது இணைக்கப்படாமல் உள்ளன) வருமான வரியின் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பு விரிவுபடுத்தப்பட வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு கூறுகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் விதிமுறையைப் பின்பற்றி மாநிலங்களுக்கிடையில் நிதிப் பங்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

		சதவீதம்
(அ)	மக்கள் தொகை (1971)	30
(ஆ)	நகர்ப்பகுதி மக்கள் தொகை (1971)	10
(இ)	ஒன்பதாம் நிதிக்குழு நிர்ணயித்தவாறு பிற்படுத்தப்பட்ட நிலையின் கூட்டுக் குறியீடு	25
(ஈ)	1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 1992 ஆம் ஆண்டு வல்லுநர் குழு அறிக்கைப்படி வறுமை நிலைக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு	25
(உ)	வரி முயற்சி	10
	மொத்தம்	100

மத்திய ஆயத்தீர்வைகள் (கலால்வரி):

மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் மீதான ஆயத்தீர்வைகள் நீங்கலாக மத்திய அரசின் பிற ஆயத்தீர்வைகள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

ஏழாவது நிதிக்குழு. பகிர்ந்தளிக்கக்கூடிய தொகு நிதியை 20 சதவீதத்திலிருந்து உயர்த்தியது. எட்டாவது நிதிக்குழு இந்நிதியை 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக உயர்த்தியது. அத்துடன் 45 சதவீதத்தில் 5 சதவீத நிதியை வரி பகிர்ப்பிற்குப் பின்னரும் பற்றாக்குறை கொண்ட

மாநிலங்களுக்கென்று ஒதுக்கியது. ஒன்பதாவது நிதிக் குழு இந்த 5 சதவீதத்தை 7.5 சதவீதமாக உயர்த்தியது. இவ்வாறு பற்றாக்குறை இல்லா மாநிலங்களின் பங்கு 40 சதவீதத்திலிருந்து 37.5 சதவீதமாக குறைக்கப்பட்டது.

பகிர்ந்தளிக்கக்கூடிய பொது நிதி 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும். நிதிக் குழு 1994 மே திங்களில் இம் மாநிலத்திற்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையில் 1995-97ஆம் ஆண்டிற்கு மாநிலங்களின் பங்கினை 45 சதவீதத்திலிருந்து 52.5 சதவீதமாக உயர்த்த வேண்டுமெனவும், 1997-2000 ஆண்டில் 60 சதவீதமாக மேலும் உயர்த்த வேண்டும் எனவும் கோரினார்.

இந்நிதியிலிருந்து பற்றாக்குறை மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படக் கூடாது. அவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275 (1) பிரிவின் கீழ் வழங்கப்படும் பற்றாக்குறை மானியம் மூலமாகவே ஈடுகட்டப்பட வேண்டும்.

டாக்டர் ராஜா செல்லையாவின் தலைமையிலான வரிச் சீர்திருத்தக்குழு, ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதற்கான திட்டவட்டமான பரிந்துரைகளைச் செய்துள்ளது. பத்தாம் நிதிக்குழு, ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாயை அதிகரிக்க இருக்கின்ற வளவாய்ப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆயத்தீர்வையை அதிகரிப்பதற்குப் பதிலாக நிர்ணய விலைகளை அதிகரிக்கும் மத்திய அரசின் நடைமுறை மாநிலங்களின் சட்டப்படியான பங்கைப் பெறத் தடையாக உள்ளது. ஆயத்தீர்வை அதிகரிக்கப்பட்டிருப்பின், மாநிலங்களின் பங்குத்தொகை அதிகரித்திருக்கும். மத்திய அரசின் நிர்ணய விலை அதிகரிப்பு, எட்டாவது, ஒன்பதாவது நிதிக்குழுக்கள் பரிந்துரைத்தாவாறு ஆயத்தீர்வை வடிவில் இருக்க வேண்டும்.

மாநிலங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவது பின்வரும் அடிப்படையில் அமைதல் வேண்டும் :

1995 நவம்பர் 10]

	சதவீதம்
மக்கள் தொகை (1971)	25
நகர்ப்பகுதி மக்கள் தொகை (1971)	15
மத்திய திட்டக்குழுவின் நிபுணர் குழு அறிக்கையின்படி கணக்கிடப்பட்ட 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி ஏழை மக்களின் சதவீத அடிப்படை	25
ஒன்பதாம் நிதிக்குழு நிர்ணயித்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலை பற்றிய குறியீடு	25
மாநில ஆயத்தீர்வை நீங்கலாக வரித் தொகுப்புப் பங்கின் (SDP) மீது வரி வருவாயாகக் கணக்கிடப்பட்ட வரி முயற்சி அடிப்படை	10
	100

கூடுதல் ஆயத்தீர்வை:

சர்க்கரை, புகையிலை, பருத்தி ஆகியவற்றின் மீது முன்பு மாநில அரசுகள் விதித்து வந்த விற்பனை வரிக்குப் பதிலாக 1957 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத்தீர்வைகள் (தனி முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்) சட்டத்தின் கீழ் விதிக்கத்தக்க கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பின் மூலமாகக் கிடைத்த வருவாய் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கூடுதல் ஆயத்தீர்வையில் பங்குத் தொகைத் திட்டம் வரி வசூலிப்பு அதிகார ஏற்பாட்டு அடிப்படையில் (Tax Rental Basis) இருக்கும். 1956-ல் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒருமனதான முடிவின் அடிப்படையில் இந்த ஏற்பாடு செயலுக்கு வந்தது.

கூடுதல் ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் வரவுகள், மாநிலங்கள் இந்த பொருட்களின் மீது தொடர்ந்து விற்பனை வரி விதித்திருந்தால் கிடைத்திருக்கக்கூடிய வருமானத்தைவிட மிகவும் குறைவே.

ஐந்தாம் நிதிக்குழு அளித்த பரிந்துரைகளின் பேரில், 1970 ஆம் ஆண்டு டிசம்பரில் தேசிய வளர்ச்சி மன்றம், இத்திட்டத்தின் செயற்கூறுகளை மறு ஆய்வு செய்து பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

[1995 நவம்பர் 10

கச்சா புகையிலையைப் பொறுத்த வரையிலான தீர்வையைத் தவிர குறிப்பிடட தீர்வையை விலை மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்த (Advalorem) தீர்வையாக மாற்றுதல்.

அனுமதிக்கப்பட்ட மதிப்பினை ஒரு குறிப்பிட்ட சதவீதமாக, இரண்டிலிருந்து மூன்றாண்டு கால அளவில் கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பை 10.8 சதவீதத்திற்கு உயர்த்துதல்.

இந்தப் பொருட்களின் மீதான அடிப்படை ஆயத்தீர்வை வசூல், கூடுதல் ஆயத்தீர்வை வசூல் ஆகிய இரண்டிற்கும் இடையிலான விகிதாச்சாரம் 2:1 என்ற அளவில் இருக்குமாறு எய்தப்பெற்று அதனைப் பராமரித்து வருதல்.

கூடுதல் ஆயத்தீர்வை வசூலை மொத்த விற்பனை மதிப்பில் 10.8 சதவீதம் என்ற அளவை 1973-74-லேயே எய்த திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால் 1989-90-ல்தான் இந்த அளவை எய்த முடிந்தது. அடுத்து வரும் மூன்றிலிருந்து ஐந்தாண்டுகளில் இதனை 15 சதவீதம் என்ற அளவிற்கு உயர்த்த வேண்டும். 10.8 சதவீதம் என்ற அளவை எய்துவதில் காலதாமதம் ஏற்பட்டதால் மாநிலங்களுக்குப் பெருமளவு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பொருட்களின் மீதான அடிப்படை ஆயத்தீர்வை வசூல் மற்றும் கூடுதல் ஆயத்தீர்வை வசூல் ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள 2:1 என்ற விகிதாச்சாரத்தை அண்மையில்தான் எய்த முடிந்தது.

கூடுதல் ஆயத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட இனங்களின்மீது அல்லது கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கப்பெறாத இனங்களின் மீது விற்பனை வரி விதிப்பதற்கு மாநிலங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

துணிகள் மற்றும் துணிப் பொருட்கள் மீதான கூடுதல் ஆயத்தீர்வையையும். வரையறுக்கப்பட்ட செஸ் வரிகளையும் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் சேர்ப்பதற்கு பத்தாம் நிதிக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்.

இந்த வருவாயை மாநிலங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பது, விற்பனை வரி வசூலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மக்கள் தொகையைப் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தால், அம்மக்கள் தொகை 1971 ஆம் ஆண்டு நிலவரப்படியான மக்கள் தொகையை, குறிப்பாக நகர்ப்பகுதி மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டிருப்பது நன்று.

1995 நவம்பர் 10]

சுங்கவரியைப் பொறுத்தமட்டில், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாத மத்திய தொகுப்பில் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவ்வரி வருவாயை மாநில அரசு கோரவில்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்று இந்த 4½ ஆண்டுக் காலத்திலே இந்தியாவில் எந்த முதலமைச்சரும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளை படைத்தவருமான எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலே தமிழக மக்கள் வருமான வரி, கலால் வரி, சுங்க வரி செலுத்தி வருகிறார்கள். அவ்வாறு செலுத்தும் வரியில் மத்திய அரசு, மாநில அரசு பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே ஓரளவு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வருமான வரியைப் பொறுத்த வரையிலும் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கக் கூடிய தொகுப்பில் 85 சதவிகிதம் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்தது. அதன்படி பார்த்தால் 7.931 சதவிகிதம் தமிழகத்திற்கு வந்து கொண்டிருந்தது. தமிழ்நாடு அரசின் கோரிக்கை, அது 85 சதவிகிதம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பது. ஆனால் 10-வது நிதிக்குழு பகிர்ந்தளிக்கக் கூடிய தொகுப்பிலிருந்து 77.5 சதவிகிதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று கூறியிருப்பதன் காரணமாகத் தமிழ்நாடு போன்ற வளர்ச்சியுற்ற மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 85 சதவிகிதமாக வருமான வரியிலிருந்து ஒதுக்கப்பட்ட பங்கு, இப்போது 77.5 சதவிகித பங்காக இருக்குமென்று குறிப்பிட்டதன் காரணமாக வளர்ந்த மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையிலும் இதுவரையில் இருந்ததைப் பகிர்ந்து அளிக்கக்கூடிய தொகுப்பிலிருந்து 45 சதவிகிதம் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்தது. மாநிலங்களுக்கிடையே நம்முடைய கோரிக்கை 1995-97 வரை வரி பகிர்ப்பை 45 சதவிகிதத்திலிருந்து 52.5 சதவிகிதமாக ஆக்க வேண்டும் என்று தமிழகத்தின் சார்பாக நாம் கேட்டுக்கொண்டோம். ஆனால் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பிலிருந்து 47.5 சதவிகிதம்தான் ஒதுக்கித் தருகின்ற அளவுக்கு 10-வது நிதிக் குழு பரிந்துரை செய்துள்ளது. கூடுதல் ஆயத் தீர்வையைப் பொறுத்த

TRUTH ALONE TRIUMPHS

வரையிலும் இதற்கு முன்னால் வந்து கொண்டிருந்த மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிக்கான பங்கு நீங்கலாக உள்ள நிகர வருவாயில் 7.064 சதவிகிதம் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டு வந்தது.

விற்பனை வரி வசூல், 1971 மக்கள் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் கூடுதல் ஆயத் தீர்வை பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரையை நாம் செய்தோம். ஆனால் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நீங்கலாக உள்ள நிகர வருவாயில் 7.669 சதவிகிதம் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டுமென்று 10-வது நிதிக்குழு பரிந்துரை செய்திருந்தது. இருந்தாலும், நாம் மத்திய அரசினிடத்திலே நம்முடைய கோரிக்கைகளை வைத்துக் கொண்டுதான் வருகிறோம்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். காவல்துறையானாலும் சரி, நிதித் துறையானாலும் சரி, வருவாய்த் துறையானாலும் சரி, சட்டத் துறையானாலும் சரி, போக்குவரத்துத் துறையானாலும் சரி, உணவுத் துறையானாலும் சரி, பொதுப் பணித் துறையானாலும் சரி, மின்சாரத் துறையானாலும் சரி, வீட்டு வசதித் துறையானாலும் சரி, இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் மிகச் சிறப்பாக செயலாற்றுகின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது மத்திய அரசு மிகவும் குறைவாக கொடுத்து வருகிறார்கள். அதை மிக அதிக அளவில் கொடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-05*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நிதிக் குழுதான் முடிவு செய்திருக்கிறது. நிதிக் குழு முடிவு செய்ததை, பாராளுமன்றம் அப்படியே ஏற்றுக் கொண்டு, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. இதிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று, மத்திய அரசை நாம் கேட்போமேயானால், அடுத்த நிதிக் குழுதான் ஏற்ற மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று அந்தப் பதிலையே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். கூடுதல் ஆயத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட இனங்களின்மீது, அல்லது கூடுதல் ஆயத் தீர்வையிலிருந்து நீக்கப்பெறாத